# பிறவியில் முதுகில் கொழுப்பு கட்டியா? உடனடி அறுவை சிகிச்சை அவசியம்

கோவை, ஆக. 24:சுமார் ஆறு வயதான குழந்தையுடன் அதன் பெற்றோர் கே.எம்.சி.எச். மருத்துவமனைக்கு வந்தனர். 'குழந்தையின் முதுகின் கீழ்ப்பகுதியில் பிறவியிலேயே ஒரு சிறு கொழுப்புக்கட்டித் தோன்றி, இப்போது வளர்வது போல் தெரிகிறது. நன்றாக நடந்து கொண்டு இருந்த குழந்தை தற்சமயம் ஆறுமாதமாக நடக்க சிறிது கஷ்டப்படுவதாகவும் வலது கால் பெரு விரலில் ஒரு காயம் மூன்று மாதமாக ஆறாமல் இருப்பதாகவும்' கூறினார்கள்.

குழந்தையை பரிசோதனை செய்து பார்த்ததில் அக்குழந்தைக்கு 'லைப்போமேனிங்கோமைலோசீல்' என்ற கரு உருவாகும் பொழுது ஏற்படும் நரம்பு மண்டல வளர்ச்சி கோளாறினால் உண்டான கொழுப்புக் கட்டி என்று கண்டறியப்பட்டது. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் செய்து பார்த்ததில், தண்டுவடத்தின் நுனிப்பகுதி அக்கொழுப்புக்கட்டியில் ஒட்டி நன்றாக கீழே இழுக்கப்பட்டிருந்தது தெரிந்தது. குழந்தை வளரும் பொழுது மேலும் தண்டுவடம் இழுக்கப்பட்டு கால்களில் பலக்குறைவும், உணர்ச்சி குறைவானதால் பெருவிரலில் காயம் ஆறாமல் இருந்தது. அக்கொழுப்பு கட்டி அகற்றப்பட்டது. இம்மாதிரியான அறுவை சிகிச்சை செய்ய உதவும் நுண்நோக்குக் கருவி கேஎம்சிஎச் மருத்துவமனையில் உள்ளது.



டாக்டர் கணேசன்

இது பற்றி கே.எம்.சி.எச் மருத்துவமனை மூளை தண்டுவட அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் டி.கணேசன் கூறியதாவது:

கருப்பையில் கரு உருவாகி இரண்டு மாதங்களுக்குள் குழந்தையின் எல்லா அவயங்களும் தோன்றிவிடும். நரம்பு மண்டலம் உருவாகும் பொழுது தண்டுவடம் பின் அதனைச் சுற்றி முதுகெலும்பு, தசைகள், தோல் ஆகியவை முறையாக வளர்ந்து முழுமைபெறும். இம்முக்கியமான மாதங்களில் தாய்க்கு போலிக் ஆசிட் குறைவாக இருந்தால் முதுகெலும்பு சரியாக மூடாமல் தண்டுவடம் கொழுப்புக் கட்டியில் இழுக்கப்பட்டு கீழ் முதுகில் தோன்றும். இதை தவிர்ப்பதற்கு தாய் கருக்காலத்தில் 400 மைக்ரோ கிராம் போலிக் ஆசிட் மாத்திரையை உட்கொள்வது அவசியம்.

இக்குறைபாடு உள்ள குழந்தைகள் பிறக்கும் போது நரம்பு பாதிப்பு இல்லாமல் முதுகில் கொழுப்புக் கட்டியுடன் ஆரோக்கியமான குழந்தையாகத் தான் இருக்கும்.

குழந்தை பிறந்த ஆறு மாதத்தில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்து கண்டறிந்து இக்கட்டியினை அகற்றினால் நரம்பு பாதிப்புகள் இல்லாமல் தப்பிக்கலாம். மேலும், இக்கொழுப்புக்கட்டி காணப்பட்டால் அக்குழந்தைக்கு சிறுநீரகம், சிறுநீரகக்குழாய், சிறுநீர்ப்பை, கர்ப்பப்பை, ஆசனவாய் ஆகியவற்றில் பிறவிக்கோளாறுகள் ஏற்படலாம். இதையும் கண்டறிந்து முறையான சிகிச்சைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். சில சமயங்களில் அறுவை சிகிச்சை செய்வதால் நரம்பு பாதிப்பு ஏற்படலாம் என்று பயந்து காலம் தாழ்த்துகிறார்கள் இது தவறான எண்ணமாகும்.

இது போன்ற கொழுப்புக்கட்டியை காலம் தாழ்த்தினால் தண்டுவடம் இழுக்கப்பட்டு கால்கள் பலவீனம் அடைதல், உணர்ச்சிக் குறைவால் பாதங்களில் ஆறாத புண் தோன்றுதல், சிறுநீர், மலம் கட்டுப்பாடு இழப்பு ஆகியவை தோன்றலாம். இக்குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு 6 மாதத்திலேயே அறுவை சிகிச்சை செய்து குழந்தைகளுக்கு ஊறுவிளைவிக்காமல் இருப்பது நம் தலையாய கடமையாகும்.

இவ்வாறு டாக்டர் கணேசன் கூறினார்.